இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, "நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன்; ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்". (லூக்ககா 3:15-16)

# 'தலைநிமிர்ந்து நில்லுங்கள் உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது'

**வத்திக்கான்:** திருவருகைக்காலத்தின் முதல் வாரம் அண்டத்தின் எழுச்சி மற்றும் மனித குலத்தின் கவலை மற்றும் பயம் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது என்றும், அத்தகைய நேரத்தில் இயேசு தனது சீடர்களிடம் தலைநிமிர்ந்து நில்லுங்கள்; ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது என்ற எதிர்நோக்கின் வார்த்தைகளை எடுத்துரைக்கின்றார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருவருகைக் காலத்தின் முதல் வாரமும் முதல் நாளுமாகிய டிசம்பர் 1 ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின்போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தலைநிமிர்ந்து மேல்நோக்கிப் பார்க்கவும், உள்ளங்களை விழிப்புணர்வு மற்றும் இலகுவானதாகக் கொண்டிருக்கவும் இயேசு அழைப்பு விடுக்கின்றார் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இயேசுவின் கவலை தனது சீடர்களின் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறு இறைமகனின் வருகைக்காக விழிப்புடன் காத்திருக்கவேண்டும் என்பதே என எடுத்துரைத்தார்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்களில் பலர் தங்களைச் சுற்றி நடக்கும் துன்புறுத்தல்கள், மோதல்கள், இயற்கைப் பேரழிவுகள் போன்றவற்றைச் சந்திக்கும்போது உலகத்தின் முடிவு வரப்போகிறது என்றே எண்ணினார்கள் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், அம்மக்களில் உள்ளங்கள் பயத்தால் கனமானதாக மாறின என்றும் கூறினார்.

தலைநிமிர்ந்து நில்லுங்கள் என்ற வார்த்தையின் வழியாக விண்ணகத்தை நோக்கியே எப்போதும் நமது பார்வை இருக்கவேண்டும் என்று வலியுறுத்தும் இயேசு தேவையற்ற வீண் கவலைகளினால் நமது உள்ளம் மந்தம் ஆகாதவாறு கவனமாகச் செயல்பட வலியுறுத்துகின்றார் என்றும் கூறினார் திருத்தந்தை.




நம் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிய கவலைகள், அச்சங்கள் அல்லது உலகில் இன்றும் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய கவலைகள், கற்பாறைகளைப் போல நம்மைக் கடினப்படுத்துகின்றன நம்மை சோர்வடையச் செய்கின்றன என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், கவலைகள் நம் உள்ளங்களைக் கனமானதாக்கி, நமக்குள் நாமே நம்மை மூடிக்கொள்ளும் சூழலை உருவாக்குகின்றன என்றும் அதற்கு மாறாக இயேசு அச்சூழலில் நம்மை தலைநிமிர்ந்து மீட்பை எதிர்நோக்கி பார்க்க அழைக்கின்றார் என்றும் கூறினார்.

நம்மை இக்கட்டான சூழலில் இருந்து காக்க விரும்பும் இறைவன் நமது எல்லாச் சூழலிலும் நம் அருகில் இருக்கின்றார், அவருடைய அன்பில் நம்பிக்கை வைக்க அழைக்கின்றார் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், நம்முடன் தனது உடனிருப்பை வெளிப்படுத்தும் இறைவன், நமது உள்ளத்தில் அவருக்கு இடமளித்து எதிர்நோக்கை மீண்டும் கண்டறிய அழைக்கின்றார் என்றும் எடுத்துரைத்தார்.

கிறிஸ்துவின் பிறப்பிற்காக நம்மைத் தயாரிக்கும் இத்திருவருகைக் காலமானது, நமது இதயங்களை ஒளிரச் செய்யவும், நமது வாழ்க்கைப் பயணத்தில் நம்மைத் தாங்கி நிற்கும் அவரை நோக்கி நம் பார்வையை உயர்த்தவும் ஒரு பொன்னான வாய்ப்பாக அமையட்டும் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், சோதனைக் காலங்களிலும் கடவுளின் திட்டத்தை ஏற்கத் தயாராக இருந்த கன்னி மரியாவை நமது வாழ்வின் துணையாக அழைப்போம் என்றும் கூறினார்.

திருவருகைக்காலத்தின் முதல் வாரம் அண்டத்தின் எழுச்சி மற்றும் மனித குலத்தின் கவலை மற்றும் பயம் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது என்றும், அத்தகைய நேரத்தில் இயேசு தனது சீடர்களிடம் தலைநிமிர்ந்து நில்லுங்கள்; ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது என்ற எதிர்நோக்கின் வார்த்தைகளை எடுத்துரைக்கின்றார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருவருகைக் காலத்தின் முதல் வாரமும் முதல் நாளுமாகிய டிசம்பர் 1 ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின்போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தலைநிமிர்ந்து மேல்நோக்கிப் பார்க்கவும், உள்ளங்களை விழிப்புணர்வு மற்றும் இலகுவானதாகக் கொண்டிருக்கவும் இயேசு அழைப்பு விடுக்கின்றார் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இயேசுவின் கவலை தனது சீடர்களின் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறு இறைமகனின் வருகைக்காக விழிப்புடன் காத்திருக்கவேண்டும் என்பதே என எடுத்துரைத்தார்.

தலைநிமிர்ந்து நில்லுங்கள் என்ற வார்த்தையின் வழியாக விண்ணகத்தை நோக்கியே எப்போதும் நமது பார்வை இருக்கவேண்டும் என்று வலியுறுத்தும் இயேசு தேவையற்ற வீண் கவலைகளினால் நமது உள்ளம் மந்தம் ஆகாதவாறு கவனமாகச் செயல்பட வலியுறுத்துகின்றார் என்றும் கூறினார் திருத்தந்தை.

**மெரினா ராஜ் - வத்திக்கான்**

## திருவருக்காலத்தை முன்னிட்டு செந்தூல் புனித யோசேப்பு ஆலயத்தில் தியானம்

திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறாகிய 01/12/2024 அன்று காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை தமிழ் பேசும் பங்கு மக்களுக்கான திருவருகைக்காலம் குறித்த சொற்பொழிவும் தியானமும் "எதிர்நோக்கின் ஒளியே வாரும்" என்னும் கருப்பொருளுடன் நடைபெற்றது. திரு ஆர்.கே சாமி அவர்களின் வழிகாட்டலுடன் திரு சூ.யூ யூலியன் அவர்களினால் வழிநடத்தப்பட்ட இந்தத் தியானத்தில் இளைஞர்கள் மற்றும் பங்கு மக்கள் ஏறக்குறைய 70 பேர் பங்கெடுத்திருந்தனர்.

இத்தியானம் தமிழ் திருத்தூதுப் பணிக் குழுவின் தலைவர் திருமதி குளோரியா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் திருமதி ரீத்தா லீன் பச்ஷேக் அவர்கள் தொடக்க இறைவேண்டல் செய்தார். தொடர்ந்து திருவருகைக் காலத்தின் முக்கி



யத்துவம் மற்றும் அதற்கான அடிப்படை ஆகியவற்றை விவிலிய அடிப்படைகளைக் கொண்டு விளக்கமளிக்கப்பட்டதைத்

- தொடர்ச்சி டுத்ப் பக்கம்.

# திருக்குடும்பப் பங்கின் திருவிவிலியப் பணிக்குழுவினர் தியானத்தில் பங்கேற்றனர்

**காஜாங்:** இங்குள்ள திருக்குடும்பப் பங்கின் தமிழ் திருவிவிலியப் பணிக் குழுவினர் கடந்த ஈராண்டுகளாக, மீட்பின் வரலாறு எனும் பொதுத் தலைப்பின் கீழ் தொடக்க நூல் தொடங்கி நீதித்தலைவர்கள் வரையிலான் நூல்களில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் ஞாயிற்றுக் கிழைமைகளில் வகுப்புகள் நடத்தி வந்தனர். பங்கில் விவிலியத்தில் அடிப்படை அறிவு வளர்ச்சி பெற்றுள்ள சிலரைக் கொண்டு இவ்வகுப்புகள்



நடத்தப்பட்டன. பங்கின் துணை அருள் பணியாளர் பொனவெஞ்சர் இராயப்ப்ன் மற்றும் அருள்பணி அல்பர்ட் ஆரோக்கியசாமி ஆகியோரும் இவர்களில் அடங்குவர் என்பது குறிபுபிடத்தக்கது.

சகோதரி மதலேன் காணிக்கைமுத்து அவர்களின் தலைமையில் சிறப்பாக இயங்கிவரும் இப்பணிக்குழு, கடந்த நவம்பர் 30 மற்றும் மறுநாள் டிசம்பர் 1 ஆகிய இரு நாள்கள் ஒரு சிறப்பு தியானத்திற்குத் திட்டமிட்டு, போர்ட்டிக்சன் மெத்தடிஸ் மையத்தில் கூடினர். இந்த இரு நாள் ஒடுக்கத்தினை ஜொகூர்-மலாக்கா மறைமாவட்டம், கூலாய் கிறிஸ்து அரசர் பங்கில் பணியேற்றிருக்கும் திருத்தொண்டர் அருமை தாஸ் அவர்கள் வழிநடத்தினார்.

முதல் 30 ஆண்டுகள் பெற்றோரோடு இருந்து குடும்பத் தொழில் செய்த இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி முதலில் குடும்பத்திற்கான பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றியப் பின், சமூகத்திற்கும் ஆலயத்திற்கும் பங்காற்ற வேண்டும் என்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார். இரத்தமும் தசையும் கொண்ட நமதாண்டவர் நம்மோடு வாழ்கிறார் என்பதை நமது அன்றாட பணியில் வெளிப்ப்டுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மேலும், ஆண்டவருக்கே தாயான மரியாவைப் போல் பணிவும் தாழ்ச்சியும் பணி வாழ்க்கையில் இன்றியமையாதது எனத் திருத்தொண்டர் அருமை தாஸ் விவிலிய ஆதாரங்களோடு விளக்கினார். அவர், தமது வாழ்க்கை சவால்களைப் பகிர்ந்து கொண்டது, ஒடுக்கத்தில் கலந்து கொண்டோரின் ஒவ்வொருவரின் மனத்தையும் தொட்டது. நாளொரு மேனியும் பொழிதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் இப்பணிக்குழுவிற்கு



இத்தியான நிகழ்வு ஒரு முத்தாய்ப்பாக அமைந்தது. இவ்வேளையில் இத்தியான நிகழ்வுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பும் ஆசீரும் வழங்கிய பங்குத்தந்தை மைக்குல் சுவா அவர்களுக்கும் துணைப் பங்குத்த்ந்தை போனவெஞ்சர் இராயப்பன் அவர்களுக்கும் நன்றி நவிலப்பட்டது.

*-அந்தோணி இன்னாசி*

முதல் பக்கத் தொடர்ச்சி..

தொடர்ந்து குழுப்பகிர்வுடனும் பங்கெடுப்பாளர்களின் முழுமையான பங்களிப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்தியானமானது, ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பெருவிழாவுக்குமான ஆன்மீகத் தயாரிப்பாக அமைந்தது. நிறைவாக திருமதி ஜெயா ஜான் அவர்களின் முடிவு இறைவேண்டலுடன் தியானம் இனிதே நிறைவெய்தியது. இந்தத் தியானத்திற்கான வழிகாட்டல் மற்றும் அனுமதியை வழங்கி ஊக்கமளித்து உதவிய பங்குத் தந்தை அருள்பணி ப்ரெட்ரிக் யோசேப்பு மற்றும் பேரருட் தந்தை ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களுக்கும் தமிழ் திருத்தூதுப் பணிக்குழு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது.

*-யூலியன், செந்தூல்*

# பொதுநிலையினர் தங்கள் ஆயரைத் தேர்ந்தெடுப்பதில் அதிக குரல் கொடுக்க வேண்டும்

கத்தோலிக்க திருஅவையில் ஆயர்களின் பங்கு உள்ளூர் மறைமாவட்டங்களில் மிகவும் முக்கியமானது என்பதால், ஆயர் தேர்ந்தெடுக்கப்படும் செயல்முறையானது பொதுநிலை கத்தோலிக்கர்களின் நம்பிக்கை வாழ்வில் மிகப் பெரிய விளைவுகளைக் கொண்டிருக்கிறது. இருப்பினும், பொதுநிலையினர், தற்போது தங்கள் ஆயரைத் தேர்ந்தெடுப்பதில் கருத்துரைக்க வாய்ப்பற்றவர்களாக உள்ளனர்.

சமீபத்தில் உரோமையில் நடந்து முடிந்த கூட்டொரிங்கியக்க ஆயர்கள் பேரவையில் உள்ளூர் ஆயர்கள் தேர்வில் பொதுநிலையினரின் குரல் கேட்கப்படுவதில்லை என்பதைக் குறித்து முடிவெடுக்கையில், வெளியிட்ட இறுதி ஆவணத்தில் "ஆயர்களைத் தேர்ந்தெடுப்பதில் கடவுளின் மக்கள் அதிக குரல் கொடுக்க வேண்டும்" என்று விருப்பம் தெரிவித்தனர்.

தற்போதைய தேர்வு செயல்முறை வத்திக்கானில் மையப்படுத்தப்பட்டுள்ளதால், இந்த செயல்பாட்டில் திருத்தந்தைக்கு இறுதி அதிகாரம் வழங்கப்படுகிறது. இம்முறைப்படி, ஒரு மறைமாவட்டத்தில், ஆயர் 'பதவிக்கு' வேட்பாளர்களாக இருக்கலாம் என்று அவர்கள் நினைக்கும் அருள்பணியாளர்களின் பெயர் பட்டியலை நிர்ணயிப்பதில் தொடங்குகிறது. இந்தப் பெயர்கள் ஒரு நாட்டில் உள்ள திருத்தந்தையின் பிரதிநிதியான திருத்தூது நுன்சியோவுக்கு அனுப்பப்படுகின்றன. அவர் மூன்று வேட்பாளர்களின் பட்டியலை ஆய்வுகள் அடிப்படையில் தயாரிப்பார். அவர் விரும்பினால் இந்தப் பட்டியல்களுக்கு வெளியேயும் ஒருவரை பரிந்துரைக்கலாம்.

இந்த செயல்முறைப்படி, மறைமாவட்டத்தின் அருள்பணியாள்கள் மற்றும் பொதுநிலையினர் கருத்துரைப்பிற்கு மிகக் குறைவான வாய்ப்பே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயர்களைத் தேர்ந்தெடுப்பதில் திருத்தந்தையின் முக்கிய பங்கு ஒரு நவீனமாக்கப்பட்டுள்ளது. தொடக்கக்கால திருஅவையில் ஒரு ஆயர் இறந்தால், மக்கள் பேராலயத்தில் கூடி, ஒரு புதிய ஆயரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர் ஓர் அருள்பணியாளராகவோ அல்லது சாதாரண பொதுநிலையினராகவோ இருக்கலாம். காலவோட்டத்தில், இந்த தேர்வுச் செய்யும் வாக்குரிமை அருள்பணியாளர்களுக்கு அல்லது அருள்பணி குழுவினருக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இருப்பினும், இந்த செயல்முறையிலிருந்து பொதுநிலையினரை அகற்ற வேண்டிய



அவசியமில்லை. ஐந்தாம் நூற்றாண்டில் திருத்தந்தை பெரிய லியோ ஓர் உண்மையான ஆயர் அருள்பணியளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், தேர்ந்தொடுக்கப்படுபவர் பொதுநிலையினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், சுற்றியுள்ள மறைமாவட்டங்களின் ஆயர்களால் அவர் அருள்பொழிவு செய்யப்பட வேண்டும் என்று நம்பினார்.

துரதிர்ஷ்டவசமாக, திருஅவை செல்வ செருக்கோடும் சக்திவாய்ந்ததாகவும் வளர்ந்தபோது, அரசர்கள் மற்றும் பிரபுக்கள் அச்சுறுத்தல்கள் மற்றும் லஞ்சம் திருஅவைக்குள் நுழைந்தது. 19 ஆம் நூற்றாண்டில் முடியாட்சிகள் அழிக்கப்பட்டவுடன், சீர்திருத்தவாதிகள் திருத்தந்தை பதவியை அரசின் அரசியல் நோக்கங்களை விட திருஅவையின் நன்மைக்காக பணியாற்றும் ஆயர்களை நியமிக்கும் பொறுப்பை நிலைநிறுத்தினர்.

இக்கலத்தில், சீர்திருத்ததின் காரணமாக, பொதுநிலையினர் அல்லது அருள்பணியாளர்கள் மூலம் உள்ளூர் மட்டத்தில் ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் பழமையான நடைமுறைக்கு திருஅவை மீண்டு வரவேண்டிய அவசியம் தலைத்தூக்கியுள்ள்து. திருஅவையின் சுதந்திரத்தை மதிக்கும் ஜனநாயக நாடுகளில் இது சாத்தியமாகும் என்றாலும், அரசியல் பின்னணி மற்றும் சர்வாதிகார தலைவர்கள் தேர்தலில் தலையிடக்கூடும் என்று வரலாறு நம்மை எச்சரிக்கிறது.

-தமிழாக்கம்: ஆர். கே.

> **'எந்த போரிலும் மோதலிலும் வெற்றிகண்டவர்கள், இழப்பவர்கள் என்று எவரும் இல்லை, அனைவருமே தோல்வியடைந்தவர்களே என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்'**
>
> **திருத்தந்தை பிரான்சிஸ்**

# அவர் வருகிறார், நாம் என்ன செய்ய வேண்டும் ?

இன்று திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு. இஸ்ராயேல் மக்களுக்கு மிகவும் விருப்பமான வார்த்தையான மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி என்ற அழைப்போடு எருசலேம் மக்களின் கவனத்தை ஈர்க்கிறார். இறைவாக்கினர் செப்பானியா. எருசலேம் மக்கள் ஏன் மகிழச்சியால் ஆர்ப்பரிக்க வெண்டும் என்பதற்கு நான்கு காரணங் களை முன்வைக்கிறார்.

1.ஆண்டவர் அவர்களது தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; 2. அவர்களது பகைவர்களை அப்புறப்படுத்தினார் 3. இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் அவர்களது நடுவில் இருக்கின்றார் 4. நீ இனி எந்தத் தீங்கிற்கும் அவர்கள் அஞ்ச வேண்டியதில்லை.

அடுத்து, அவர்கள் மனவுறுதியோடு இருக்க வேண்டும். ஏனெனில், ஆண்டவர் அவர்கள் நடுவில் இருக்கின்றார்; அவர் மாவீரர்; மீட்பு அளிப்பவர்; அவர்கள் பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்; தம் அன்பினால் அவர்களுக்கு புத்துயிர் அளிப்பார்; என்று ஆதரவு வார்த்தைகள் கொடுக்கப்படுகிறது.

இரண்டாவது வாசகத்தில், பவுல் அடிகள் கவலை கொள்ளாமல், நம்பிக்கை யோடு வாழ பிலிப்பியருக்கு மிக முக்கியமான உதாரணங்களைக் கொடுக்கிறார். எதைப் பற்றியும் கவலை கொள்ள வேண்டாம் என்கிறார் பவுல்.

நற்செய்தியில், ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கின் தன்மையையும், அவர் யாருடைய திருமுழுக்கை பகிர்ந்து கொண்டார் என்பதையும் இப்பகுதி படம் பிடிக்கிறது. கூட்டத்தினர் சாதாரண மக்கள், தற்செயலாக ஒன்று கூடியவர்கள், ஆட்சியாளர்களுக்கும் தலைவர்களுக்கும் எதிர்ப்பதமானவர்கள். யோவானிடம் பலர் வந்து போகின்ற போது, இந்த சாமானிய மக்கள்தான் முதலாவது கேள்வியை கேட்கிறார்கள், இப்படியாக இவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதராணமாக இருக்கிறார்கள் நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்வியை எழுப்புகிறார்கள்.

யோவானின் பதில்: அதிகாரத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என்கிறார். வரிகொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை, இயேசுவும் போதுருவை வரி கொடுக்கச் சொன்னது ஞாபகம் வருகிறது. பொய்சாட்சி சொல்ல வேண்டாம், பயமுறுத்த வேண்டாம், மற்றவரை சுரண்ட வேண்டாம் என்ற அறிவுரை வழங்கப் படுகிறது, மாறாக, உங்கள் ஊதியமே போதுமென்று இருங்கள் என்பது அழகான அறிவுரையாக மலர்கிறது.

தொடர்ந்து, மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்கு தகுதியில்லை என்று யோவான் உரைக்கிறார். கிரேக்க உரோமை காலத்தில் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளே தமது முதலாளி முதலைகளின் காலணிகளை அவிழ்த்தனர், இங்கு அடிமைகளை கொச்சைப்படுத்த லூக்கா முயலவில்லை. மாறாக, மெசியாவை காட்ட முயல்கிறார். தொடர்ந்து, நெருப்பும் ஆவியும் உன்னதமான தூய்மைப் பொருட்கள், முதல் ஏற்பாட்டில் இவை கடவுளின் உடனிருப்பைக் குறிக்கின்றன.

மேலுள்ள வாசகங்களைப் போல நற்செய்தியும் அருகில் இருக்கும் ஆண்டவரை குறிப்பதாக அமைகிறது. ஆண்டவரைக் கோவில்களில் தேடித் தேடி களைத்துப்போன நமக்கு இன்றைய வாசகங்கள், அவர் நம் அருகில் இருப்பதை உணர்த்துகின்றன.

ஆர்.கே. காஜாங்

### திருவருகைக்காலம் - 3-ம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | செப் 3: 14-17 |
| திரு.பாடல் | 12: 2-3. 4. 5-6 |
| 2-ம் வாசகம் | பிலி: 4: 47 |
| நற்செய்தி | லூக்கா 3: 10-18 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை: வாரம் 3**